25th October 1971]

துவக்கப்பட்டு சேர்ந்து நடத்தப்பட்டது, இதில் கட்சிச் சார்பிற்கு இடமில்லை.

திரு. எம். ஆறுமுகசாமி: அரசியல் கட்சி என்று நான் சொல்லவில்லை. பார்ட்டி என்பதற்கு சரியான தமிழ் சொல் தெரியாத காரணத்தால் கட்சி என்றேன். அதில் கலந்து கொண்ட அறிவாளிகள் யார் யார், என்னென்ன தகுதியின் அடிப்படையில் கலந்துகொண்டார்கள் என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இந்த மகாநாட்டில் டாக்டர் மு. வரதராசன் துவக்க உரை ஆற்றினர். கல்வித் துறை இயக்குனர் வந்திருந்த அனைவரையும் வரவேற்றுப் பேசினர். சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. நெ. து. சுந்தர வடிவேலு தலைமை தாங்கினர், கல்வி அமைச்சர் கலந்துகொண்டார்.

திரு. எஸ். முத்துசாமி: இந்தக் கருத்தரங்கு கல்வி சம்பந்தப் பட்டிருப்பதால் ஆசிரியர் தொகுதிப் பிரதிநிதிகள் அழைக்கப் பட்டார்களா? அப்படி அழைக்கப்படாவிட்டால், இனிமேலாவது அழைக்கப்படுவார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, இது புது டில்லியிலுள்ள தேசியக்கல்வி ஆராய்ச்சிக் குழுவின் ஒத்துழைப்போடு இங்குள்ள கல்வித் துறையினரால் அமைக்கப்பட்டது. யார் யார் அழைக்கப்பட்டார் கள் என்ற விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால், விவரம் சொல்லலாம்.

திரு. எஸ். முத்துசாமி: இப்படிப்பட்ட கருத்தரங்கிற்கு அழைப்பு வந்தாலும், அது கருத்தரங்கு முடிந்த பிறகு, உறுப் பினர்களுக்குக் கிடைக்கிறது. அதை முன்னலேயே அனுப்பு வதற்கு ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அழைப்புகள் அனுப்புவதில் காலத் தாழ்வு ஏற்பட்டிருக்குமானல், அது கவனிக் கப்பட வேண்டிய ஒன்ருகும். கருத்தரங்கிற்கு அழைப்பு என்ருல், நடைபெறுவதற்கு முன் அனுப்புவதுதான் முறை. நடந்தபிறகு வந்தால் அது அழைப்பு என்று பொருளாகாது, அறிவிப்பு என்பதாகத்தான் இருக்கும்.

Annamalai University

* 28 *Q.*—THIRU G. SWAMINATHAN (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the services of a Revenue Divisional Officer were requisitioned at the Annamalai University about 3rd February 1971; and

(*b*) if so, the details thereof?

[25th October 1971

அண்ணமலைப் பல்கலைக் கழகம்

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. வி. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு கல்வி—உள்ளாட்சிநிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப்பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) வருவாய்க் கோட்ட அதிகாரியினது பணி அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் 1971 பிப்ரவரி 3-ஆம் நாள் அளவில் வேண்டப் பட்டதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) 3—2—1971 அன்று மாலை 6-30 மணிக்கு அண்ணமலை பல்கலைக் கழக துணைவேந்தரிடமிருந்து மாணவர்களிடையே அமைதியின்மையை ஒட்ட ஏற்பட்ட சட்ட ஒழுங்கு பிரச்சினையைக் கவனிப்பதற்கு பல்கலைக் கழக வட்டாரத்திற்கு வரும்படி சிதம்பரம் கோட்ட ஆட்சியாளருக்கு ஒரு விண்ணப்பம் வந்தது B.Ed. பிரிவு மாணவர்கள் அப்பிரிவைச் சேர்ந்த விரிவுரையாளரை வேலை நீக்கம் செய்யவேண்டும் என்று கிளர்ச்சி செய்தனர்.

Book Fair

*29 Q.—Thiru V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether any book fair was conducted in Madras City during the month of January, 1971;

(*b*) whether the Government have participated at the fair; and

(*c*) if so, the details thereof?

புத்தகக் கண்காட்சி

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) 1971 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் சென்னை மாநகரில் புத்தகக் கண்காட்சி ஏதேனும் நடத்தப்பட்டதா?

(இ) அப்பொருட் காட்சியில் அரசு பங்கெடுத்துக் கொண்டதா?

(உ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்

(இ) ஆம்.

(உ) தமிழ்நாடு பாடநூல் வெளியீட்டுக் கழகத்தின், கல்லூரிப் பாடநூல் வெளியிடும் பிரிவு, சென்னை பல்கலைக் கழகத் தேர்வு மண்டபத்திற்கருகில் வென்லாக் தோட்டத்தில் 29—12—1970